**REA.4/2025 in E.P.55/2018 in O.S.39/2008**

Date: 24.02.2026

பெயர் : சித்துராஜ் **(ம.சா.1) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1. எனது பெயர் சித்துராஜ் எனக்கு 61 வயதாகிறது. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் படிப்பறிவு கிடையாது. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் விவசாயம் மட்டும் அல்லாமல் பருப்பு வியாபாரமும், கோழி வியாபாரமும் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு வாய்தாவிற்கும் நீதிமன்றத்திற்கு வந்துகொண்டிருக்கிறேன் என்றால் ஆமாம். நான் நீதிமன்றத்திற்கு ஒவ்வொரு வாய்தாவிற்கும் வருவதால் நீதிமன்றத்தில் என்னென்ன உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகிறது என்பது குறித்து எனக்கு தெரியும் என்றால் தெரியாது.

2. எனக்கு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்படும் அனைத்து உத்தரவுகளும் தெரியும் என்றாலும், நான் வேண்டுமென்றே தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே எனக்கு தெரியாது. புரோ நோட் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் பேரில் சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தேன் என்றால் ஆமாம். அந்த மேல் முறையீட்டில் எனக்கு எதிராக தீர்ப்பானதால் சென்னை உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது மேல் முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம்.

3. நான் சேலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மேல் முறையீட்டு வழக்கு விவரத்தையும், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மேல் முறையீட்டு வழக்கு விவரத்தையும் குறிப்பாணை மூலம் நீதிமன்றத்திற்கு தெரிவித்தேன் என்றால் எனக்கு நினைவில்லை.

கே.எம்.சி.பெரியசாமி என்பவரை வழக்கறிஞராக வைத்திருந்தேன் என்றாலும், அவர் மூலமாக குறிப்பாணைகள் தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும், எனவே எனக்கு இந்த வழக்கில் என்னென்ன குறிப்பாணைகள் தாக்கல் செய்திருக்கிறேன் என்பது தெரியும் என்றாலும், தற்போது வழக்கிற்காக தெரியாது என்று வேண்டுமென்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த இரண்டாவது மேல் முறையீடு Admission சமயத்திலேயே 31.03.2015ம் தேதிலேயே தள்ளுபடி ஆகிவிட்டது என்றாலும், ஆனால் நான் 2020ம் ஆண்டு வரை மேல் முறையீடு நிலுவையில் இருப்பதாக வழக்கறிஞர் மூலம் குறிப்பாணை தாக்கல் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. புரோ நோட் வழக்கில் பணம் கட்டவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

5. இந்த விவரம் தெரியாமலேயே தான் மாவட்ட நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும் மேல் முறையீடு செய்தேனா என்றால் ஒரு வழக்கு எனக்கு சாதமாகிவிட்டது, மற்றொரு வழக்கு எனக்கு விரோதம் ஆனதால் நான் மேல்முறையீடு செய்தேன். ஒரு வழக்கு ஜெயித்துவிட்டதாக நான் சாட்சியம் அளிக்கும் நிலையில் அந்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். வேண்டுமென்றே நான் நீதிமன்ற உத்தரவுகளை தெரிந்து கொண்டு பொய் சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்திருந்த மனுவில் என்ன பரிகாரம் கேட்டிருக்கிறேன் என்றால் நான் வாதிக்கு பணம் கொடுக்கவேண்டியதில்லை என்று சொல்லி போட்டிருக்கிறேன். காளியப்பன் தாக்கல் செய்திருக்கும் மனுவில் 6 அயிட்ட சொத்துக்களை காட்டியிருக்கிறார் என்றால் ஆமாம். அதில்

சர்வே எண். 102/1E என்பது 7 1/2 செண்ட் நிலம் என்றால் ஆமாம். அந்த நிலம் எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்று பதிலில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல, அது என்னுடைய நிலம் தான். சர்வே எண். 102/1E ல் உள்ள சொத்து சுந்தரியம்மாள் என்பவர் பெயரில் இருக்கிறது என்றால் சரியல்ல. எனது பெயரில் தான் இருக்கிறது. சுந்தரியம்மாள் எனது தாயார் தான்.

7. நான் E.P.80/2018 தாக்கல் செய்துள்ள பதிலுரையில் சர்வே எண். 102/1E உள்ள நிலம் சுந்தரியம்மாள் என்பவர் பெயரில் இருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 102/1D நிலத்தில் 17 செண்ட் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். இரண்டு சர்வே எண்களும் எனக்குதான் பாத்தியப்பட்டது. மேற்படி 17 செண்ட் நிலத்திற்கு வடக்கு புறமும், கிழக்கு புறமும் சர்வே எண். 102/1E நிலம் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி 17 செண்ட் நிலத்திற்கு வடபுறமும், கிழபுறமும் ரோடு இருக்கிறது என்றால் ஆமாம்.

8. அதனால் தான் எனது பழைய வழக்கறிஞர் ஏ.எம்.சி. பெரியசாமி என்பவர் மூலம் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் சர்வே எண். 102/1E நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டதல்ல என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ரோடு பாகத்தை எனது நிலம் என்று சொல்லி நீதிமன்றத்தில் ஏலம் விடமுடியுமா என்றால் விடமுடியாது. ரோடு நிலமான சர்வே எண். 102/1E நிலத்தை என்னுடையது என்று சொல்லி ஏலம் விடமுடியுமா என்றால் அது என்னுடைய நிலம், எனவே நிலம் ஏலம் விடமுடியாது. அது ரோடு கிடையாது.

9. சர்வே எண். 102/1E நிலம் என்னுடையது அல்ல என்று சொல்லிவிட்டு தற்போது என்னுடையது என்று சொல்வது வழக்கிற்காக என்றால் சரியல்ல. எனது நிலத்திற்கு அடுத்துதான் ரோடு இருக்கிறது. சர்வே எண்.

102/1D நிலம் 17 செண்ட் மட்டும் தான் எனது சுவாதீனத்தில் இருக்கிறது என்றால் சரியல்ல.

10. நான் தாக்கல் செய்துள்ள அரசு வழிகாட்டி மதிப்பில் ஒரு ஏக்கர் எவ்வளவு மதிப்பு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் ரூ.1 இலட்சத்திற்கு குறைவாகதான் இருக்கும் என்று சொல்லியிருக்கிறேன். வழிகாட்டி மதிப்பில் சொல்லப்பட்டிருக்கும் தொகைக்கு மேல் ரூ.50,000/ம் அல்லது 1 இலட்சம் உயர்த்தி ஏலம் விடுவதற்கு எனக்கு ஆட்சேபனையில்லை என்றால் ஆட்சேபனை இருக்கிறது. நான் ஏலம் விடக்கூடாது என்று தான் சொல்கிறேன்.

11. எனக்கு சர்வே எண். 102/1E தவிர்த்து 1 1/2 ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால் அந்த 1 1/2 ஏக்கர் நிலம் எனது பெற்றோர்கள் சம்பாதித்தது அது பாகம் பிரியாமல் இன்னும் கூட்டாக இருக்கிறது. எனது பதில் உரையில் மேற்கண்டவாறு சொல்லாமல் தற்போது வழக்கை இழுத்தடிப்பதற்காக இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 102/1E நிலம் ரோடு பாகம் என்பதால் அதனை ஏலம் விடமுடியாது என்றாலும், எனவே எனது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றாலும் சரியல்ல, நான் இரண்டு நிலத்தையும் ஏலம் விடவேண்டாம் என்று தான் சொல்கிறேன்.

12. ரோடு நிலத்தை நிலம் விடச்சொல்லி கேட்கும் இந்த மனுவை அனுமதிக்க முடியாது என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற விடாமல் காலம் கடத்துவதற்காக எந்தஉரிமையும் இல்லாமல் இந்த மனுவை தாக்கல் செய்திருப்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் நிறைவேற்று மனுவின் நடவடிக்கையில் தீர்ப்பு கடன் தொகையை செலுத்தவில்லை என்றால் ஆமாம்.

13. நீதிமன்ற உத்தரவிற்கு கீழ்படியாமல் இந்தமனுவை தாக்கல் செய்திருப்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தீர்ப்பு கடனை செலுத்தாமலும், மற்றும் வாதியிடமும் தீர்ப்பு கடனை செலுத்தாமலும், ஜப்தியை நீக்குரவு செய்ய கோரும் பரிகாரம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே 6 அயிட்ட சொத்துக்களில் 2 அயிட்ட சொத்துக்களை மட்டுமே ஏலம் விடுவதற்கு நீதிமன்றம் அனுமதித்துள்ளது என்றாலும், அந்த இரண்டு அயிட்ட சொத்திலும் ஒரு அயிட்ட சொத்து ரோடு பாகம் என்பதால் அதனை ஏலம் விடமுடியாது என்றாலும், எனவே 17 செண்ட் நிலத்தை மட்டுமே ஏலம் விடமுடியும் என்றாலும் எனவே எனது மனு தள்ளுபடி செய்யதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.